Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal)
ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

# கள்ளிக்காட்டு இதிகாசம் உணர்த்தும் வேளாண் மரபுகள்

**முனைவர் ஆ. தனலெட்சுமி**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620002

**ஆய்வுச்சுருக்கம்**

மனித நாகரிகம் ஆற்றங்கரைகளிலே தொடக்கம் பெற்றதாக வரலாற்று வல்லுநர்கள் வகுத்துரைக்கின்றனர். தனிமனிதன் பிறரோடு சேர்ந்து வாழத் தொடங்கிய காலமே சமுதாயம் உருவான காலமாகும். தனக்கு என்கிற மனப்பான்மை விலகி நமக்கு என்கிற உணர்வு பிறந்ததும் ஒற்றுமையுடன், வாழ்வின் வளத்திற்கு உழைக்க முற்பட்டான் மனிதன். ஆண்கள் வேட்டையாடவும், உணவுப் பொருட்களைத் தேடவும் புறத்தே சென்றனர். அகத்தே வாழ்ந்த பெண்கள் பறவைகளின் எச்சங்களில் புதிய விளைச்சலைக் கண்டதும் வியந்து, நிலத்தைக் கீறி. நிலங்களில் விதைகளை விதைத்தனர்.

விளைச்சலின் பெருக்கத்தைக் கண்டதும் ஆண்களும் இணைந்து முறையான தொழிலாக அமைத்தனர். இத்தொழிலே உழவுத் தொழிலாக மக்களின் உயிர்த் தொழிலாக விளங்குகிறது. இந்த உழவு தொழில் சிறப்படைய வேளாண்மையில் பல மரபுகளைக் கையாளுதல் அவசியமாகும். அவ்வுத்திகள் கள்ளிக்காட்டு இதிகாசம் என்ற புதினத்தில் இழையோடி இருப்பதை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

கள்ளிக்காடு, வைகை அணை, தரிசு நிலம், நிலம், நாற்று நடுதல், கால்நடை வளர்ப்பு, கிணறு வெட்டுதல்

**முன்னுரை**

ஆடை இல்லாமல் மனிதன் வாழ்ந்தது முதல் அறிவியல் கல்வி செழித்தோங்கும் இந்த அறிவியல் யுகம் வரை மனிதன் உணவைத் தேடி அலைந்த வண்ணம் ஓடி கொண்டிருக்கிறான். செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் அனுப்புகிற மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட நவீன எந்திரங்களால் மண்ணிலே விதைக்காமல் உணவைச் சுயமாகத் தரமுடியாது.

சங்க இலக்கியத்தில் பசித்த வறியோருக்கு உணவு அளித்த மனிதனை 'பசிப்பிணி மருத்துவன்' என புகழ்ந்துள்ளனர். இதன் வாயிலாக பசி போக்குபவனும் மருத்துவன் என்பதை இந்த உலகத்துக்கே தந்தவர்கள் சங்கத் தமிழர்கள் என்பது புலனாகும்.

தொன்மை மிகுந்த தொழிலாக விளங்கும் உழவுத் தொழில் குறித்த செய்திகள் பல இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. பழந்தமிழர் வரலாற்றைப் பார்க்கிற போது தமிழர், தமிழ்

மன்னர்கள் உழவு தொழிலைப் போற்றி பாதுகாத்தமை தெரிய வருகிறது. சங்கப்புலவர்கள் உழவு தொழிலுக்கு வரி போடக் கூடாது என்று மன்னனை வேண்டி இருக்கிறார்கள். சங்க காலத்தில் உழவுத் தொழில் நாட்டின் உயிர்த் தொழிலாகப் போற்றப்பட்டு வந்தது என்பதை, வெள்ளைக்குடி நாகனார் புறநானூற்றுப் பாடலால் உணரலாம். அப்பாடலில்,

**"பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்**
**குடிபுறம் தருகுவை யாயின் நின்**
**அடிபுறம் தருகுவர் அடங்கா தேரே" (புறநானூறு - 35)**

என்ற வரிகளால் காளை மாடுகளை போற்றி உழவு செய்யும் குடிகளின் சுமையை நீ குறைத்து அவர்களைப் பேணினால் அடங்காத பகைவர் உன்னிடம் அடிபணிவர் என்று மன்னனுக்கு அறிவுறுத்துவது தெளிவாகின்றது. இதனால் எல்லோரையும் காப்பவர்கள் உழவர்களே என்பதை அறியலாம்.

இந்த விவசாயத்திற்குக் காரணமான விவசாயிகளின் வாழ்வை உணர்த்துமாறு கள்ளிக்காட்டு இதிகாசம் படைக்கப் பெற்றுள்ளது.

**கள்ளிக்காட்டு இதிகாசம்**

"1958 – ஆம் ஆண்டு வைகை அணை கட்டி முடிக்கப்பட்டு, அதன் நீர்ப்பிடிப்புப் பகுதிக்குள் இருந்த சிற்றூர்கள் இந்திய வரைபடத்திலிருந்து துடைக்கப்பட்ட போது அழுதுகொண்டே ஊரைவிட்டு வெளியேறும் அம்மாவின் கையைப் பற்றிக் கொண்டு இடுப்பளவுத் தண்ணீரில் நனைந்த கால் சட்டையோடு தானும் அழுது வெளியேறுகிறான் ஓர் ஐந்து வயதுச் சிறுவன் அவன் பெயர் வைரமுத்து" – **(கள்ளிக்காட்டு இதிகாசம் - முன்னுரை)**

என்று தம்மைப் பாதித்த நிகழ்வையே கதையாகப் படைத்து உலகிற்கு அளித்ததாக வைரமுத்து கூறியுள்ளார். அவர் கள்ளிக்காட்டைப் பற்றியும், அங்குள்ள விவசாயிகளின் வாழ்வைப் பற்றியும் கூறும் போது,

"இவர்கள் உலகிற்கு உண்பதற்கு உணவளித்து விட்டு, தனக்கு உண்ண உணவின்றி துன்பமடைகின்றனர். கூட்டு – பொரியல் - வறுவல் - வதக்கல் - பச்சடி – ஊறுகாய் - அப்பளம் என்று செல்வந்தர் உண்ணும் உணவு இவர்களுக்கு ஒருநாள் கூட கிடைத்ததில்லை. தினமும் கஞ்சி - கூழ் - களி – சோறு இவற்றில் ஏதாவது ஓர் உணவு மட்டுமே எடுத்துக் கொண்டு, மிளகாய் - வெங்காயம் - துவையல் - கருப்பட்டி – வெல்லம் - வற்றல் - தேங்காய்ச்சில் இவற்றில் ஏதேனும் ஒன்றை முந்தைய உணவுக்கு மாற்றாக தொட்டுக்கொள்வர். பன்னிரண்டு மணி நேரம் உழைத்த இவர்கள், பகல் தூக்கத்தைத் தரித்திரமென்று சபித்து விட்டு இரவில் தங்களை மறந்து தூங்குவார்கள். நெல்லுச் சோறும், கோழிக் குழம்பும் தான் கள்ளிக்காட்டில் உயர்ந்தபட்ச உபச்சாரமாக கருதப்படுகிறது." **(கள்ளிக்காட்டு இதிகாசம் - பக்கம் 15)**
என்கிறார்.

தன் வயலில் உழைத்து, உண்டு வாழும் இவர்களுக்கு அவர்களின் கிராமமே உலகம். மற்ற எதைப் பற்றியும் அறிந்துக் கொள்ளாதவர்கள். வயலில் விளைச்சல் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அதையே நம்பி வாழ்பவர்கள்.

**சரளைகாட்டைத் தரிசு நிலமாக்கல்**

தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி அதில் விவசாயம் செய்து வெற்றி கண்டவர்கள் தமிழர்கள். கிராமப்புறங்களில் விவசாயம் செய்பவர்கள் தன்னுடைய கடின உழைப்பால் உலகிற்கு உணவிடம் உன்னதர்கள். விவசாய நிலங்களை உருவாக்கிட அல்லும் பகலும் உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்வியலை ‘கள்ளிக்காட்டு இதிகாசம்” புதினத்தில் காணமுடிகின்றது. இப்புதினத்தின் கதைத் தலைவன் பேயத்தேவர் கடின உழைப்பாளி ஆவார். தண்ணீர் இல்லாத நிலத்தில் விவசாயம் செய்து தன் வாழ்;க்கையை நடத்தி வரும் திறமையான விவசாயி. அவருடைய விளைநிலத்தை கடனுக்காக பிறர் அபகரித்துக் கொண்ட போது தரிசு நிலமாக கிடந்த இடத்தை தன் பேரன் உதவியோடு நல்ல விளைநிலமாக மாற்றினார். அதற்காக அவர் அடைந்த துன்பத்தை, “துக்கத்தையெல்லாம் நெஞ்சுக்குள்ளே மூட்டைக் கட்டி ஒரு மூலையில் வச்சுட்டு ரவ்வும் பகலும் புஞ்சக் காட்ட நஞ்சையாக்குறாரு பேயத்தேவரு. மம்பட்டியும் கடப்பாரையும் அருவாளுமா மண்ணோட மல்லுக்கட்டி, மேடு கோடு தட்டி நிலஞ்சேக்குறாக தாத்தாவும் பேரனும்.

ஒரு மாசம் - இரண்டு மாசம் - ஆறு மாசம் - ஒரு வருசமா கல்லுன்னு பாக்காம முள்ளுன்னு பாக்காம சரளைக்காடாகக் கெடந்த நெலத்தை ஒப்புரவு பண்ணி, இந்தா இந்தான்னு பத்து ஏக்கரையும் பொன்னு வெளையற பூமியா மாத்திப்பிட்டாக கெழவனும் பேரனும்” **(கள்ளிக்காட்டு**

**இதிகாசம் - பக்கம் 33)**
என்ற வரிகள் நமக்கு எடுத்தியம்பும்.

**நிலத்தை உழுதலும், நீர்ப்பாய்ச்சலும், உரமிடலும்**

விவசாயம் செழித்து, நிலத்தில் நட்ட பயிர்கள் நன்கு வளர நிலத்தை உழுதலும், அதற்கு உரிய நேரத்தில் நீர்ப்பாய்ச்சுதல், உரமிடுதல் ஆகியன மிக அவசியமானதாகும். நிலத்தை உழுவதற்கு காளை மாடுகளும், கலப்பைகளும் பயன்படுத்தப் பெற்றுள்ளன.
நிலத்தை உழுவதை,

“கண்ணுக்கெட்டிய தூரம் வரை கானல் அலைகள் கதகதவென்று காய்ந்து கொண்டிருக்க அந்த முன்கோடை மாதத்தில் வெயிலை நிலா வெளிச்சமாய்க் கருதி உழுது கொண்டிருந்தார்கள் இரண்டு ஏர்க்காரர்கள்.” **(கள்ளிக்காட்டு இதிகாசம் - பக்கம் 16)**
என்றும், நீர்ப்பாய்ச்சுதலை,

“பேயத்தேவர் கமலை இறைத்துக் கொண்டிருந்தார் ஒற்றை ஆளாய். தண்ணீர் கட்ட ஆளில்லை. வழக்கமாய்த் தண்ணீர் கட்டும் அழகம்மாளுக்கு அன்று மேல் கால் வலி. கத்தரிப் பாத்திகளை குண்டு குண்டாய்த் தடுத்து ஏற்கெனவே வாமடை விலக்கி விட்டு வந்து கமலை பூட்டியதால் தாந்தண்ணி பாய்ந்து கொண்டிருந்தது,” **(கள்ளிக்காட்டு இதிகாசம் - பக்கம் 72)**
என்றும், உரமிடுதலை,
பேயத்தேவர் நிலத்தை உழும் போது நிலம் உழுகின்ற முறைப்பற்றி,

"தை உழவு அய்யாட்டுக் கெடடா" **(கள்ளிக்காட்டு இதிகாசம் - பக்கம் 18)**

என்கிறார். அதாவது ஆயிரம் உரம் போட்டாலும், அது ஆட்டுக்கெடா மாதிரி நிலத்துக்கு வலு ஊட்டாது. ஆட்டுப் புழுக்கையும், கோமியமும் சேர்ந்தா பொட்டகாட்டில் பொன் விளையும். அப்படி ஐந்து ஆட்டு;க்கடா வச்சா, என்ன ஊட்டமோ, அப்படி ஓர் ஊட்டமாம் தை மாச உழவு என்பதே இதன் பொருளாகும்.

**நாற்று நடுதல்**

நாற்று நடும் போது இரு நாற்றுகளுக்கிடையே குறிப்பிட்ட இடம் விட வேண்டும். அதைப் பற்றி கள்ளிக்காட்டு இதிகாசம்,

**"நண்டூர நெல்லு**
**நரியோடக் கரும்பு**
**வண்டியோட வாழை**
**தேரோடத் தென்ன" (கள்ளிக்காட்டு இதிகாசம் - பக்கம் 71)**

என்று கூறுகிறது. அதாவது நெல்லு நட்டா ரெண்டு நாத்துக்கு மத்தியிலே நண்டோடனும், கரும்பு நட்டா ரெண்டு கரும்புக்கு மத்தியிலே நரியோடனும், வாழ நட்டா ரெண்டு வாழைக்கு மத்தியிலே வண்டியோடனும், தென்ன நட்டா ரெண்டு தென்னைக்கு மத்தியில தேரோடனும் என்று பேயத்தேவர், ஊர்க்காரர்களுக்கு கூறினார். மிளகாய் நாற்று நடும் போது நாத்துகளுக்கிடையில் ஒரு சாண் இடைவெளி வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மிளகாய்ச் செடி முதல் காய் காய்க்க எழுபது நாள் ஆகும். நட்ட செடியானது முதலில் வேர் பிடிக்க வேண்டும். வாரம் ஒரு முறை தண்ணPர் பாய்ச்சி விட்டு, மாதம் ஒரு முறை களையெடுக்க வேண்டும். வேர் நனைய மழை பெய்ய வேண்டும். சீக்கடிக்காமல் இருக்க வேண்டும். பிஞ்சு இறங்கும் காலத்தில் சூறைக்காற்று வீசக் கூடாது. காய்த்துப் பழமாகி வாரம் ஒரு எடுப்பு எடுக்கும் காலத்தில், எடுக்கும் பழம் வெறுந்தோல் காட்டிச் சிரிக்காமல் விதைக் கட்டுமானம் உள்ள பழமாக இருக்க வேண்டும். அப்போது தான் நல்ல பலன் கிடைக்கும் என்று மிளகாய்ச் செடியின் வரலாறு விளக்கி கூறப்பெற்றுள்ளது.

**கிணறு வெட்டுவதில் நுணுக்கம்**

வயல் செழிப்புடன் விளைச்சலைத் தர வேண்டுமாயின் நீர்ப்பாசனம் அவசியமானதாகும். மழை நீரை மட்டுமே நம்பி இருப்பது தவறானதாகும். எனவே வயல்களுக்கு மத்தியில் கிணறு வெட்டுவது சிறப்பானதாகும். கிணறு வெட்டவதில் பல நுணுக்கங்கள் உண்டு. அதன்படி, பேயத்தேவர் கிணறு வெட்டியதை,

"கிணறு வெட்டுவதற்கு கிழக்க மேற்க – நீளம், அது ஒரு கெசம் கூடுதலாக இருக்கனும். தெக்க வடக்க – அகலம், அது ஒரு கெசம் குறைவாக இருக்கனும். இந்த முறைப்படி பேயத்தேவர் ஏழுக்கு ஆறு என்ற அளவில் கிணறு வெட்டினார்." **(கள்ளிக்காட்டு இதிகாசம் - பக்கம் 292)**

என்ற வரிகளால் அறியலாம்.

**கால்நடை வளர்ப்பு முறை**

பண்டைத் தமிழர்கள் நிலங்களை உழுவதற்கும், பண்படுத்துவதற்கும், விதைப்பதற்கும் மாடுகளைப் பயன்படுத்தினர். அதை தொடர்ந்து அவர்கள் பாலில் இருந்து கிடைக்கும் மோர், தயிர் முதலிய பொருட்களையும் தங்களி;ன் உணவாக உட்கொள்ள ஆரம்பித்தனர்.

மாடுகளுக்கு மனித உயிரைக் காட்டிலும் மதிப்பளித்தனர். விவசாயக் கலாச்சாரத்தில் ஆடுமாடுகள் குடும்பத்தின் அங்கமாக இருந்தன. பிள்ளைகளைப் போலவே ஆடு மாடுகளுக்கு பெயர் வைத்தனர். தான் பட்டினி கிடந்தாலும் தான் வளர்க்கும் ஜீவராசிகள் பட்டினி கிடக்காமல் பார்த்துக் கொண்டனர். ஆடுமாடுகள் இறந்து விட்டால் விசாரிப்பது கள்ளிக்காட்டின் கலாச்சாரமாகியது. பெண்ணுக்கும், பசுவுக்கும் ஒரே நேரத்தில் பிரசவ வலி எடுத்தால், பெண்ணுக்கு குழந்தைப் பிறப்பதை விட, பசு கன்றை ஈன்றெடுப்பது குறித்தே மகிழ்ச்சி அடைந்தனர். காரணம் என்னவென்றால் ஒரு பெண், பெண் குழந்தையை ஈன்றெடுத்தால் அந்த வீடு இடி விழுந்த வீடாகி விடுகிறது. ஏனென்றால் அவர்களின் சமூக வாழ்வில் ஆண் வரவு. பெண் செலவு. ஆனால் பசு அப்படியில்லை. அது காளங்கன்று ஈன்றாலும், கிடாரிக்கன்று ஈன்றாலும் வறுமையின் வாசலுக்கு அது வரவு தான். ஒரு மாடு குடும்பம் காக்கும். ஒன்பது மாடு குலம் காக்கும் என்ற நம்பிக்கை அவர்கள் வாழ்வில் வேரோடி இருந்தது.

கள்ளிக்காட்டு வாழ்க்கை முறையில் ஆளை வெட்டுவது கூட அன்றாடம் என்று சகித்து கொள்வார்கள். ஆனால் மாட்டை வெட்டுவதை மன்னிக்கவே மாட்டார்கள். மாடு இல்லாமல் விவசாயம் இல்லை என்பதால் மாட்டை தெய்வமாக கருதினர்.

**முடிவுரை**

தமிழர்கள் வேளாண்மை செய்வதில் பல மரபுகளைப் பின்பற்றி வந்தனர். இயற்கை முறையில் நிலத்தை உழுது, செயற்கை உரங்களைப் பயன்படுத்தாமல், மண்ணின் தன்மையைப் பேணி, உணவுப் பொருட்கள் தயாரித்து உலக உயிர்களை வாழ செய்வது அவர்களின் வாழ்வியல் அறமாகவே இருந்தது. அதை பராமரித்து உலகை உய்யச் செய்வோம்.

**முதன்மை ஆதாரம்**

1. வைரமுத்து, கள்ளிக்காட்டு இதிகாசம் சூர்யா லிட்ரேச்சர் பிரைவேட் லிமிடெட்,22, நான்காம் குறுக்கு தெரு, ட்ரஸ்ட் புரம், சென்னை-24. முதற்பதிப்பு - செப்டம்பர் 2001.
2. https://shorturl.at/Yv7ou
3. துணைமை ஆதாரம்
4. அ.மா.பரிமணம்கு.வெ.பாலசுப்பிரமணியன்.(பதிப்பாசிரியர்), புறநானூறு (உரை), நியூ செஞ்சுரி புக் ஹவஸ் பிரைவேட் லிமிடெட், அம்பத்தூர், சென்னை .முதல் பதிப்பு 2004.